**சுருக்கம்**

பொது நூலகத் துறை – அரசு நூலக வளாகம் சென்னை - சர்வதேச தரத்தில் அமைத்தல் – நிர்வாக அனுமதி வழங்குதல் - ஆணை வெளியிடப்படுகிறது.

**பள்ளிக் கல்வி (கே2) துறை**

அரசாணை (நிலை) எண்.224 நாள்.13.11.2008

படிக்கப்பட்டவை

1) அரசாணை (நிலை) எண்.195, நாள். 6.8.2007.

2) அரசுக் கடித எண். 25867/கே2/2007-5 நாள் 8.1.2008.

3) கன்னிமாரா பொது நூலக இயக்குநர் கடித ந.க.எண்.3658/அ5/2006, நாள் 26.9.2008.

-------

**ஆணை:**

2007-2008-ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் வரவு செலவு திட்ட அறிக்கையில், சென்னையில் சர்வதேச தரத்திலான நவீன மாநில நூலகம் ஒன்றை ரூ.100/- கோடி மதிப்பீட்டில் அரசு அமைக்கும், என்று வெளியிடப்பட்ட அறிவிப்பினைத் தொடர்ந்து, மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், சென்னையில் சர்வதேச தரத்திலான நவீன மாநில நூலகம் அமைப்பதற்கு கொள்கை அளவில் ஒப்புதல் அளித்து, அந்நூலகத்தினை அமைப்பதற்காகும் செலவினத்தினை நூலக ஆணைக்குழு 80 விழுக்காடும் அரசு 20 விழுக்காடும் மேற்கொள்ள ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில் நவீன மாநில நூலகம் கட்டுவதற்கு ஆகும் மொத்த செலவினத்தில் நூலக ஆணைக்குழு பங்குத் தொகையான 80 விழுக்காடு தொகையை முதலில் செலவு செய்யவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2) இந்நிலையில் சென்னையில் அரசு நூலக வளாகக் கட்டடம் கட்டுவது குறித்து 25.07.2008 மற்றும் 26.07.2008 ஆகிய தேதிகளில் ஒப்பந்தப்புள்ளி கோரி நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டதில், 6 நிறுவனங்களால் ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பிக்கப்பட்டன என்றும், அவற்றில் **M/s. EAST COAST CONSTRUCTIONS & INDUSTRIES LIMITED, CHENNAI -600 006** என்ற நிறுவனம் கட்டுமான, மின்சார மற்றும் இயந்திர பணிகளுக்காக குறைந்த விலைப்புள்ளியாக ரூ.145/- கோடி ஆக குறிப்பிட்டுள்ளது என்றும், மேலும், தளவாடங்கள், கட்டிடக் கலைஞர் கட்டணம் உள்ளிட்ட செலவினங்களுக்காக ரூ.37/- கோடிக்கு மதிப்பீட்டில் ஒட்டு மொத்த ஒதுக்கீடு கொடுக்கப்பட்டுள்ளது என்றும், எனவே சென்னையில் அரசு நூலக வளாகம் கட்டுவதற்கு ரூ.182/- கோடி செலவாகும் என கன்னிமாரா பொது நூலக இயக்குநர் மேலே மூன்றில் படிக்கப்பட்ட தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார். எனவே, 2007-2008-ஆம் ஆண்டிற்கான வரவு-செலவு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட ரூ.100/- கோடிக்கு மாறாக தற்போது சென்னையில் சர்வதேச தரத்திலான நூலகம் கட்ட பெறப்பட்டுள்ள ஒப்பந்தப் புள்ளியின்படி கூடுதலாக ஆகும் ரூ.82/- கோடியையும் சேர்த்து மொத்த தொகை ரூ.182/- கோடி செலவில் அரசு நூலக வளாகம் கட்ட அரசின் நிர்வாக அனுமதியினையும் அத்தொகையில் ரூ.162/- கோடி நூலக ஆணைக்குழுவின் பங்களிப்பாகவும் ரூ.20/- கோடி அரசு பங்களிப்பாகவும் அமையத் தக்க வகையில் அரசு ஆணையும் பெற்று வழங்குமாறு கன்னிமரா பொது நூலக இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3) கன்னிமாரா பொது நூலக இயக்குநரின் கருத்துருவானது, அரசால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. அதன்படி அரசு நூலக வளாகம் கட்டுவதற்கு ஆகும் மொத்த செலவினம் ரூ.165.76 கோடியாக கீழ்கண்டவாறு அனுமதிக்கலாம் என அரசு கருதுகிறது.

| | |
|---|---|
| 1. குறைந்த ஒப்பந்தப்புள்ளி மதிப்பு (பேரத்திற்குப் பின்)<br>(Lowest Tender Value after Negotiation) | ரூ. 132.30 கோடி |
| 2. ஒட்டுமொத்த ஒதுக்கீடு<br>(Lumpsum Provision) | ரூ. 26.54 கோடி |
| 3. கலந்தறி கட்டணம்<br>(Consultant fee) | ரூ. 6.92 கோடி |
| மொத்தம் | ரூ. 165.76 கோடி |

அதன்படி சென்னையில் அரசு நூலக வளாகக் கட்டடம் கட்டுவதற்காகும் செலவுத் தொகையில் 80 விழுக்காடு நூலக ஆணைக்குழுவும், 20 விழுக்காடு தமிழக அரசும் மேற்கொள்ளும் என ஆணையிடப்பட்ட மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணைக்கு மாற்றாக, இத்திட்டத்திற்காக அரசு நிதியிலிருந்து ரூ.20.00 கோடி மற்றும் நூலக ஆணைக்குழு நிதியிலிருந்து ரூ.145.76 கோடி செலவு செய்திடவும், ஆக மொத்த மதிப்பீடு ரூ. 165,76,00,000 (ரூபாய் நூற்றி அறுபத்தைந்து கோடியே எழுபத்தாறு இலட்சம் மட்டும்)-க்கு நிர்வாக ஒப்புதல் அளித்து அரசு ஆணையிடுகிறது. மேலும், சட்ட ரீதியான செலவினங்கள் (Statutory Payments) தவிர இதர ஒட்டுமொத்த ஒதுக்கீடுகளுக்கு (lumpsum provisions) விரிவான மதிப்பீடுகள் தயாரித்து அரசின் ஒப்புதல் பெற வேண்டும் என்றும் அரசு ஆணையிடுகிறது.

7) இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண்281/து.செ.(RC)/2008, நாள்.13.11.2008-ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ம.குற்றாலிங்கம்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
பொது நூலக இயக்குநர், சென்னை – 2.
இயக்குநர், (பொறுப்பு)
கன்னிமாரா பொது நூலகம், சென்னை – 8.
மாநிலக் கணக்காயர், சென்னை – 18/35.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை – 35.
தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்),
பொதுப்பணித் துறை, சென்னை – 5.

**<u>நகல்</u>**
நிதித்துறை, சென்னை - 9.
மாவட்ட ஆட்சித் தலைவர், சென்னை.
பள்ளிக் கல்வித் துறையின் கீழ் வரும் அனைத்து துறைத் தலைவர்கள்.
பள்ளிக் கல்வித் துறையின் அனைத்துப் பிரிவுகள்.
School Education Department Web Site.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 9.
நேர்முக முதுநிலை உதவியாளர்,
பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அலுவலகம்,
சென்னை – 9.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/